www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2022

சித்திரக்கலை - I
Art - I

Gr. 12 (2023)

Three Hours

**அறிவுறுத்தல்கள் :**
- ❖ இஇவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி - I**
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**பகுதி - II**
- ➢ **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி – I

01) “பிசாசு நடனக்காரரின் மகள்” என்ற ஓவியத்தை வரைந்த ஓவியர் உரு வரைபு ஓவியங்களை வரைவதிலும் புகழ்பெற்றவர். அவர் பெயர்.
(1) ஸ்ரான்லி அபேசிங்க (2) லயனல் வென்ற்
(3) A.C.G.S. அமரசேகர (4) J.G. பீலிங்
(5) J.D.A பெரேரா (………)

02) புத்தபகவான் இலங்கைக்கு மூன்று முறை வந்தமையையும் அவை தொடர்பான வரலாற்றுச் செய்திகளையும் அழகான முறையில் ஓவியமாக்கியிருப்பது.
(1) கொழும்பு சேதவத்த விகாரையில்
(2) களனி ரஜமகா விகாரையில்
(3) மகியங்கனை ரஜமகா விகாரையில்
(4) மாளிகாகந்த வித்யோதய பிரிவென விகாரையில்
(5) கோதமி விகாரையில் (……….)

03) இலங்கையில் தாதுகோபங்களுடன் இணைந்ததாக அதன் நான்கு திசைகளில் ஒரே அளவினதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடக்கலை அம்சம்
(1) வாயில் தோரணம்
(2) வாயில் மண்டபம்
(3) வாஹல்கடம்
(4) வட்டதாகே
(5) பதனாகர (………)

04) அக்கடமி யதார்த்த வாதத்தில் தோற்றம்.
(1) சலோனினை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
(2) பிரித்தானிய றோயல் அக்கடமியை கொண்டு உருவாகியது.
(3) மறுமலர்ச்சி கலையை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
(4) ஒளியியல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
(5) கனவடிவ வாதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.. (…………)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

05) எகிப்திய புதிய ராசதானிக் கால சிற்பங்களின் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்படுவது.
(1) மரபு ரீதியான பண்புகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(2) மரபு ரீதியான அம்சங்களும் யதார்த்த பூர்வமான அம்சங்களும் சம நிலையில் பயன்படுத்தப் பட்டுள்ளமையாகும்.
(3) இயற்கைப் பண்புகளுக்கு அழுத்தம் கொடுத்து சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(4) மரபு ரீதியான அம்சங்களைக் கவனத்திற் கொள்ளாமையாகும்.
(5) பாரா அரசர்களின் வீர பராக்கிரமங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும். (…….)

- **வினா இல *06 - 10* வரை கீழே தரப்பட்டுள்ள A,B,C,D,E ஆகிய நிழற்படங்களோடு தொடர்புபட்ட வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக. செய்க.**


A


B


C


D


E

06) A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மௌரிய கலைக்குரிய அசோகத் தூண்கள் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டமை
(1) புத்தர் சரிதையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் நடைபெற்ற நிலையங்களை நினைவு படுத்துவதன் பொருட்டாகும்.
(2) அசோக மன்னனின் கீர்த்தியை நாட்டிற்கு வெளிப்படுத்துவதன் பொருட்டாகும்.
(3) அசோக மன்னனின் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய செய்தியைக் குறியீடாகக் கொள்வதன் பொருட்டாகும்.
(4) அசோக மன்னனின் தர்ம பிரசார செயற்பாடுகளை நினைவுறுத்துமுகமாகவாகும்.
(5) அசோக மன்னனின் கலிங்கத்து யுத்த வெற்றியை நினைவுறுத்துமுகமாகவாகும். (.......)

07) B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட கால படைப்பு
(1) இயற்கை வர்ணத்தால் தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(2) செதுக்கல் கோட்டமைப்பில் (Engraving) தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(3) கரித்துண்டுகளால் கிறுக்கப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(4) கைப்பதிவுகள் மூலம் தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(5) மிருகக்கொழுப்பால் தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும் (…..)

08) C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள எகிப்திய சிற்பமானது.
(1) தெய்வீகப் பண்புகள் உள்ளடக்கப்பட்ட பாரா அரச வம்சத்ததைச் சேர்ந்த அரச குடும்ப சிலையாகும்.
(2) மரபுரீதியான, யதார்த்த பண்புகளைச் சித்தரிக்கும் சிலையாகும்.
(3) பழைய இராசதானிக் காலத்திற்குரிய மென்குரேயும் அவரது மனைவியும் சிலையாகும்.
(4) பழைய இராசதானிக் காலத்திற்குரிய ஆடைகள், தலைப்பாகை ஆகியவற்றுடன் கூடிய சிலையாகும்.
(5) தாடி குறிப்பிடப்பட்டுள்ளமையால் எகிப்திய சிற்பங்களிடையே மிகச் சிறப்பானதொரு சிலையாகும். (.......)

09) D எழுத்தினால் காட்டியுள்ள இராணி மாளிகை எனவும் அறியப்படும் மகாசென் மாளிகையின் சந்திர வட்டக்கல்.
(1) சிறுபுடைப்புச் செதுக்கல்களில் ஒன்று.
(2) பிராணிகளின் உருவங்கள் உள்ள்டக்கி செதுக்கப்பட்ட செதுக்கல்
(3) சலனம், ரிதம், மென்மையான பூரணப்பாட்டைக் கொண்ட செதுக்கல்
(4) அரைவட்டக் கருங்கல் தகட்டுச் செதுக்கல்.
(5) கற்சிற்பியின் சிறப்பான நிர்மாணிப்பு

(…...)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

10) E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட முண்டப் படிமமானது,
(1) சிவப்புச் சுண்ணக்கல்லில் செதுக்கப்பட்ட மனித அளவிலானதொரு சிலையாகும்.
(2) யதார்த்தபூர்வமான உடலம்சங்களை நேர்த்தியாகக் கொண்ட ஒரு சிலையாகும்.
(3) சமய தத்துவமொன்றினால் உருவான பாவம் நிறைந்ததொரு சிலை யாகும்.
(4) இந்து சமயப் பூசகரொருவர் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) மொசப்பத்தேமிய பண்புகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். (……)

❖ **வினாஇலக்கம் *11* தொடக்கம் *15* வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட *1* தொடக்கம் *8* வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க**


1


2


3


4


5


6


7


8

11) அனுராதபுரக்கால பிரசித்திபெற்ற தாதுகோபங்களை காட்டும் உருக்கள்.
(1) 1,2,5,6,7 (2) 3,4,5,7,8 (3) 2,3,4,6,7 (4) 1,2,5,7,8 (5) 4,5,6,7,8 (.........)


12) பிரசித்திபெற்ற வாகல்கடத்தை வெளிப்படுத்துகின்ற உரு
(1) 1 (2) 3 (3) 2 (4) 7 (5) 4 (.........)

13) வட்டதாகே அமைப்பின் எஞ்சிய பகுதியைக்காட்டும் உருக்கள்.
(1) 2,5 (2) 2,6 (3) 1,7 (4) 5,8 (5) 7,8 (.........)

14) விகாரையொன்றினுள் காணப்படும் தாதுகோபத்தைக் காட்டும் உரு.
(1) 5 (2) 8 (3) 3 (4) 2 (5) 4 (.........)

15) நிசங்கமல்ல மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட தாதுகோபத்தைக் காட்டும் உரு
(1) 5 (2) 3 (3) 1 (4) 2 (5) 4 (.........)

➢ ***16 - 20* வரை கீழே தரப்படும் நிழற்படத்தைத் தொடர்புபடுத்தி கேட்கப்படும் வினாக்களிற்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

16) இவ்வோவியம் காணப்படும் இடம்
(1) களனி புதிய விகாரை
(2) பெல்லன்வல விகாரை
(3) கொழும்பு கலாபவனம்
(4) கண்டி திருநிற்றி தேவாலம்
(5) கொழும்பு சுகந்திர வர்த்தக வலயம் (……)

17) இந்நிர்மாணிப்பினை கருப்பொருளாக ஏற்றுக் கொள்ளக் கூடியது,
(1) வெற்றிகரமாக ஜெருசலத்தினுள் பிரவேசித்தல்
(2) நல்ல சமாரியன்
(3) பாதகாணிக்கை
(4) யேசுநாதர் சிலுவையில் அறையப்படல்
(5) கல்வாரிமலைக்கான புனித பயனம்
(……)

18) இவ் ஓவியம்,
(1) ஓவியர் சோளியஸ் மென்டிசின் தூரிகையின் மகிமையை எடுத்துக்காட்டுவதாகும்.
(2) சோமபந்து வித்தியாபதியின் உருவமைப்பின் மகிமையைய எடுத்துக்காட்டுவதாகும்.
(3) அல்பட் தர்மசிரியின் பெறுமதி மிக்க விகாரைச் சுவர் ஓவியமாகும்.
(4) ஓவியர் எம். சார்லிசின் விகாரைச் சித்திரக் கலையின் நன்மதிப்பினை எடுத்துக் கூறும் ஓவியமாகும்.
(5) டேவிற் பெயின்டரின் கன்வஸ் ஓவியங்களுள் பெறுமதி மிக்க நிர்மாணிப்பாகும். (……)

19) இவ் ஓவியத்தின் வர்ணப் பயன்பாடு பற்றி ஆராயும் போது தெரிய வருவது,
(1) பிரகாசமான வர்ணப் பயன்பாட்டினைத் தவிர்த்து, இருண்ட வர்ணங்களின் மூலம் ஓவியத்தின் ஆழத்தினை வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சி ஆகும்.
(2) பிரகாசமான வர்ணங்கள் ஊடாக ஐரோப்பிய சித்திரக்கலையில் இருந்து வேறுபட்ட வர்ணப்பயன்பாடாகும்.
(3) தொனிப்பொருளின் பொருத்தப்பாட்டுடனும் தொகுப்பு வர்ணங்களின் பயன்பாட்டினால் செய்யப்பட்ட உணர்வு பூர்வமான வெளிப்பாடு ஆகும்.
(4) வர்ணங்களின் குணப் பண்புகள் வெளிப்படுமாறு தெளிவாகத் தோன்றும் வர்ணங்களை ஒன்றுடன் ஒன்று பொருந்தச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஆகும்.
(5) வெப்ப வர்ணங்களின் வகைகள் சரியான ஒழுங்குகளுக்கமைய கையாளப்பட்ட ஓவியமாகும். (……)

20) இவ் ஓவியத்தின் வெளிப்பாட்டினதும் தொகுப்பினதும் சிறப்பம்சம்,
(1) மனித உருவங்களின் ஆடை அணிகலன்களை நோக்கும் போது நடன, நாட்டியக் கலையின் செல்வாக்குப் பெற்றுள்ளமை தெரிகிறது.
(2) இவ் ஓவியத்தின் மூலம் வெளிப்படுகின்ற அழகிய தன்மை கிராமியக் கலைகளினதும் உயர்தரமான சித்திரக் கலையினதும் ஒன்றிணைப்பாகக் தெரிகிறது.
(3) மனித உருவங்களில் விழுமியப் பண்புகளையும் அபிநயங்களையும் காணக்கூடிய தாகவுள்ளது.
(4) கிறிஸ்தவ சித்திரக் கலைக்குப் புதிய கருத்தொன்றினை வழங்கி, உணர்வு பூர்வமான, உயிரோட்டமான,மென்மையான உடல்நிலைகளைக் கொண்ட மனிதவுருவங்களை சித்தரித்தமை.
(5) சிகிரியா பரம்பரையினர் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய ரேகைகளின் நளினம் மீண்டும் இவரது ஓவியங்களில் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பமாகும். (……)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி - II

➢ **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1) கொழும்புக் காலத்தின் போது விகாரை ஓவியக் கலைக்கு மிகவும் பங்களிப்புச் செய்த ஓவியர்களிடையே எம்.சாளிஸ்,சோமபந்து வித்தியாபதி, சோலியஸ் மெண்டிஸ் ஆகியோர் முக்கிய இடத்தை வகிக்கின்றனர்.**

(i) களனி விகாரையில் ஓவியங்களை வரைந்தபோது சோலியஸ்மெண்டிஸ் தெரிந்தெடுத்த ஓவியக்கலை விடயங்கள் இரண்டையும் குறிப்பிடுக

(ii) சித்தார்தரின் திருமணம் என்ற விடயத்தினை சோமபந்து வித்தியாபதி ஓவியமாக வெளிப்படுத்திய விதத்தினை சுருக்கமாக விமர்சிக்குக.

(iii) எம்.சாளிஸ் இனதும் சோலியஸ்மெண்டிஸ் இனதும் ஓவியப் பாங்குகளின் முனைப்பான இயல்புகளை ஒப்பிட்டு ஆராய்க.

**2) கொழும்புக் காலத்தின் போது அக்கடமி யதார்த்த மரபில் ஓவியங்களை படைத்த கலைச்சங்க ஓவியர்கள் ஓவியக் கலைக்கு மிகவும் பங்களிப்புச் செய்தனர்.**

(i) கொழும்பு கலாபவனத்தில் காணப்படும் கலைச்சங்க ஓவயர்களின் படைப்புகள் இரண்டு தருக

(ii) அக்கடமி யதார்த்த மரபு பற்றிக் குறிப்பிடுக.

(iii) டேவிற் பெயின்டரின் ஓவியப் பாங்கின் முனைப்பான இயல்புகளை ஆராய்க.

**3) சிந்துவெளி மக்கள் கலை பற்றிய அதிக ஆர்வம் கொண்டிருக்கவில்லை எனினும் கிடைத்துள்ள கலைப்படைப்புக்கள் மூலம் அவர்களின் கலை ஆற்றலை அறிந்து கொள்ள முடிகின்றது.**

(i) மிருக உருவங்கள் கொண்ட இரண்டு முத்திரைகளைப் பெயரிடுக.

(ii) சிந்துவெளி மக்கள் எதற்காக முத்திரைகளை பாவித்தார்கள் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(iii)மொகஞ்சாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட நடனப் பெண் சிலையின் அழகிய அம்சங்கள், ஊடக கையாளுகை தொடர்பாக விமர்சனம் ஒன்றை முன்வைக்குக.

**4) வரலாற்றுக்கு முந்திய காலத்துக்குரிய குகை ஓவியங்களைக் கொண்டு அக்காலத்தில் வாழ்ந்த மனிதனின் அழகியல் புரிந்துணர்வைப் போன்று சமூகத் தகவல்களையும் வெளிப்படுத்தமுடியும்.**

(i) பிரான்சிலும் , ஸ்பானியாவிலும் ஓவியங்கள் உள்ள ஒரு குகைகள் வீதம் குறிப்பிடுக.

(ii) அவ் ஓவியங்களை வரைவற்கு குகை ஓவியர்கள் ஏன் தூண்டப்பட்டனர் என்பதை அறிஞர்கள் எடுத்துரைத்த கொள்கைகளைக் கொண்டு சுருக்கமாக விமர்சிக்க.

(iii)அல்மீராவில் உள்ள ‘முக்காரம் இடும் எருது’ இளைப்பாறும் பைசன் வடிவம்’ ஆகிய ஓவியங்கள் மூலம் அவர்களது அனுபவங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள தன்மையை விமர்சிக்குக.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

**5) கி.மு 3000 ஆண்டளவில் ஆரம்பித்த எகிப்தியக்கலை எகிப்தியருடைய அந்தரங்க வாழ்வின் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றது.**

(i) எகிப்திய பாரம்பரிய இயல்புகளை எடுத்துக்காட்டும் இரு சிலைகளைக் குறிப்பிடுக.

(ii) எகிப்திய பாரம்பரியக் ஓவியக்கலைப்பாங்கில் காணப்படும் அடிப்படை இயல்புகளை சுருக்கமாக எழுதுக,

(iii) நைல்நதிப் பள்ளத்தாக்கில் கிடைக்கப் பெற்ற 'அபுசிம்பல்' தேவஸ்தானம் எகிப்திய கட்டடக்கலையின் மிகச் சிறந்த நிர்மாணிப்பாகும். இவ் நிர்மாணிப்பு யாரின் பொருட்டு உருவாக்கப்பட்டது. என விளக்குக.

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk



agaram.lk

www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2022

சித்திரக்கலை - II
Art - II

Gr. 12 (2023)

Three Hours

அறிவுறுத்தல்கள் :

- ✶ உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

### இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள் கூட்டமும்

❖ பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru.
1st Term Examination - 2022

சித்திரக்கலை - II
Art - II

Gr. 12 (2023)

Agaram.LK - Keep your dreams alive!

**மேற்பார்வையாளருக்குரியது**

நிலைப்பொருட்கூட்ட வரைதல்
(ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்களின் அமைப்பு)



1) பெட்டி
2) பிளாஸ்டிக் யக்
3) துணி
4) போத்தல்
5) ஐந்தூரிய பூவும் இலைகளும்

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2022

FWC

சித்திரக்கலை - III
Art - III

Gr. 12 (2023)

Three Hours

**கவனிக்க :**

- ✶ உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிற்பக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
- ✶ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)

**"அ", "ஆ", "இ" பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

### பகுதி 'அ'
சித்திர ஒழுங்கமைப்பு

➢ **கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்க.**

1. அதிகாலை கரை திரும்பும் மீனவர்கள்
2. அருவியின் அருகே சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்
3. கிராமப் புறத்தில் அமைந்துள்ள தேநீர் கடை
4. வயல் அறுவடையில் ஈடுபட்டுள்ள மக்கள்.

### பகுதி 'ஆ'
அலங்கார ஆக்கம்

➢ **கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்க.**

5. கிராமக் கலைகளைப் பிரதிபலிக்கும் 1' × 2' அளவுள்ள சுவர் அலங்கரிப்பிற்கான மரச்செதுக்கல் ஒன்றை திட்டமிட்டு நிர்மாணிக்க.
6. பட்டுச் சேலைக்கரை ஒன்றை பறவைகள், பூக்கள் கொண்ட காட்டுருக்களால் அலங்கரிக்க. (மஞ்சள் நிற பல்வேறு சாயல்களைப் பயன்படுத்துக)
7. அறுகோண வடிவமுடைய தாம்பாளம் ஒன்றுக்குப் பொருத்தமான முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிக்க.

### பகுதி 'இ'
கிறபிக் சித்திர நிர்மாணிப்பு

➢ **கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்க.**

8. யுவதிகளின் கேசத்திற்கு பயன்படுத்தப்படும் புதிய எண்ணெய் போத்தலுக்கான முகப்புறை ஒன்றை வடிவமைக்குக.
9. "போதையின் அவலங்கள்" என்ற நூல் ஒன்றிற்கு முகப்பு அட்டைக் காட்டுரு ஒன்றை அமைக்குக. புத்தகத்தின் பெயரையும் பயன்படுத்துக.
10. "டெங்கிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்" எனும் தலைப்பில் போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk